# மாலை முரசு

பக்கங்கள் 15+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி 21 வெள்ளிக்கிழமை 04.04.2025 | அதிர்வு 244


**மோடியின் வருகையையொட்டி**

## 11 இந்திய மீனவர்கள் அவசரமாக விடுவிப்பு

**(ந.லோகதயாளன்)**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று இலங்கை வருகின்றமையை யொட்டி இலங்கைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட் டிருந்த தமிழக மீனவர்களை 02▶


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# 59 தேர்தல் மனுக்களையும் நிராகரித்தது உயர்நீதிமன்று

## மேன்முறையீட்டு மன்றுக்கு முற்றிலும் மாறாகத் தீர்ப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்புமனுக் கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித் துத் தாக்கல் செய்யப்பட்ட 37 ரிட் மனுக் களை ஏற்றுக்கொண்டு, அவற்றைத் தேர் தல் நடவடிக்கையில் சேர்க்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் இன்று முற்பகல் உத்தரவிட, அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு சில மணி நேரங்களின் பின்னர், அதேபோன்று 59 மனுக்களை உயர்நீதிமன்றம் அடியோடு நிராகரித்துத் தீர்ப்பு வழங்கி இருக்கின்றது. 02▶

# 37 வேட்புமனுக்களை ஏற்கும் உத்தரவுக்கு எதிராக தேர்தல் ஆணையம் மேன்முறையீடு

## அப்பீல் நீதிமன்றின் தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றை நாடும்

உள்ளூராட்சி சபைத் தேர் தலையொட்டி நிராகரிக்கப்பட்ட 37 வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளுமாறு கொழும்பு மேன்முறையீட்டு (அப்பீல்) நீதி மன்றம் இன்று முற்பகல் வழங் கிய தீர்ப்புக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் மேன்முறையீடு செய்ய தேர்தல் ஆணையம் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகின் றது.

வேட்புமனுக்களில் இளம் வேட் பாளர்களின் வயதை உறுதிப்படுத்து வதற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப் பிரதிக்குப் பதிலாக 02▶





உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally




# பூஸா சிறைச்சாலையில் கைதி வெட்டிக்கொலை!

பூஸா சிறைச்சாலையில் கைதி ஒருவர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

46 வயதுடைய கைதியே இவ்வாறு கொலை செய்யப் பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றுமொரு கைதியால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கொலை செய்யப்பட்ட கைதியின் உடலில் 11 வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 59 தேர்தல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளம் வேட்பாளர்களின் வயதை உறுதிப்படுத்துவதற்கான பிறப்புச் சான்றிதழைப் பொறுத்தவரை சான்றிதழ் பத்திரத்தின் நிழல் பட பிரதியில் சமாதான நீதிவான் சான்றுரைத்து இருந்தால் அத்தகைய ஆவணத்தை நிராகரிக்காமல் ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டவையாகக் கூறப்பட்ட 37 வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு இன்று முற்பகல் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைமை நீதியரசர் எம்.ரி.முஹம்மட் லபார், நீதியரசர் கே. பிரியங்கா பெர்னாண்டோ ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

ஆனால் கடந்த நான்கு நாள்களாக இதே போன்ற மனுக்களை விசாரித்து வந்த உயர்நீதிமன்றம் இதே காரணத்துக்காக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஏற்று அங்கீகரித்து இருப்பதோடு, தேர்தல் வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மொத்தம் 53 ரிட் மனுக்கள் மற்றும் ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் இன்று அடியோடு நிராகரித்துத் தீர்ப்பளித்து இருக்கின்றது.

சமாதான நீதிவான் சான்றுரைத்த பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தின் பிரதியை ஏற்றுக்கொள்ள உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இது தொடர்பில் காலையில் மேன் முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்ட விடயத்துக்கு முற்றிலும் தலைகீழான முடிவை - தீர்ப்பை உயர்நீதிமன்றம் அறிவித்திருக்கின்றது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைராஜா, மஹிந்த சமயவர்த்தன, சம்பத் அபயக்கோன் ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்தத் தீர்ப்பை இன்று பிற்பகல் வழங்கியது.

## 11 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கும் நடவடிக்கையை இலங்கை அரசு இன்று அவசர அவசரமாக முன்னெடுத்தது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்த 14 இந்தியா மீனவர்களில் மூன்று இந்திய மீனவர்களுக்கு எதிராக ஏற்கனவே குற்றப்பத்திரங்கள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற நிலையில், எஞ்சிய 11 பேரும் இன்று பகல் அவசர அவசரமாக நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களுக்கு எதிரான 'பி' அறிக்கையை விலக்கிக்கொள்வதாக அரச தரப்பு நீதிமன்றத்தில் தெரிவித்தமையை அடுத்து அவர்கள் 11 பேரும் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.அவர்கள் 11 பேரும் தமிழகத்துக்கு திருப்பி அனுப்பப்படுவதற்காக உடனடி யாக கொழும்பு மிரிஹானவில் உள்ள புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக் கப்பட்டனர்.

## 37 வேட்புமனு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிழல் பட பிரதியில் சமாதான நீதிவான் சான்றுரைத்துருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளும்படி மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று காலை வழங்கிய தீர்ப்பில் தெரிவித்திருந்தது. அதன் அடிப்படையிலேயே பெரும்பாலும் 37 ரிட் மனுக்களில் பலவற்றையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்றுத் தீர்ப்பு வழங்கியிருந்தது.

ஆனால், இன்று மாலை இதே விவகாரத்தையொட்டி தனது தீர்ப்பை வழங்கிய உயர்நீதிமன்றம், மேற்படி பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தின் நிழல் படப் பிரதியில் சமாதான நீதிவான் சான்றுரைத்திருப்பதை உரிய ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனுதாரர்களின் கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

ஒரே விடயத்தையொட்டி இரண்டு நீதிமன்றங்கள் வித்தியாசமான தீர்ப்பை வழங்கியிருக்கையில், நியாயாதிக்கம் கூடிய மேனிலை நீதிமன்றமான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பின்பற்ற தேர்தல் ஆணையம் தீர்மானித்து இருக்கின்றது. அதனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்து, உயர்நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு, அதன்படி செயற்பட தேர்தல் ஆணையம் முடிவு செய்து இருப்பதாகத் தெரியவருகின்றது.

ஆயினும், நீதிமன்ற விடுமுறை இன்றுடன் தொடங்குவதால், விடுமுறை சமயத்தில் விசேடமாக உயர் நீதிமன்றத்தைக் கூட்டுவதற்கான விண்ணப்பத்தைத் தேர்தல் ஆணையம் சமர்ப்பித்து, தனது மேன்முறையீட்டைது முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# யாழில் மோ. சைக்கிள் விபத்து! தாதி ஒருவர் பரிதாப உயிரிழப்பு!!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தாதியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் கடமை புரியும், சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் கிருஷ்ண வேணி (வயது 52) என்ற தாதியரே உயிரிழந்தள்ளார்.

கடந்த 26ஆம் திகதி இரவு கடமைக்காக மோட்டார் சைக்கிளில் தெல்லிப்பழை வைத்தியசாலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வேளை விளான் சந்தியில் மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த தாதிய உத்தியோகத்தர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அங்கு சிகிச்சை பெற்று வந்தார்.

அந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.





# 15 வயது மாணவி கூட்டு வன்கொடுமை! 5 மாணவர்கள் உட்பட ஏழு பேர் சிக்கினர்!!

பாடசாலை மாணவி ஒருவரைக் கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 5 மாணவர்கள் உட்பட ஏழு பேர் ஹோமாகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்களில் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மாணவியின் காதலனும் அடங்குகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, மேற்படி மாணவி மேலதிக வகுப்புக்குச் செல்வதாகப் பெற்றோரிடம் கூறிவிட்டு தனது காதலனுடன் வெளியே சென்றுள்ளார்.

இதன்போது சந்தேகநபரான காதலன் மாணவியை ஏமாற்றி ஹோமாகம பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்று கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மாணவியின் பெற்றோரால் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மாணவி பரிசோதனைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளைக் ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய மட்ட போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் முதலிடம்

சமூக சேவைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட 2025 ஆண்டுக்கான அங்கவீனமுற்ற நபர்களுக்கான (மாற்றுத்திறனாளிகளுக்கான) தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி நேற்று மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

தேசிய மட்டத்தில் 25 மாவட்டத்திலிருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதில் 6 தங்கப் பதக்கங்களையும், 10 வெள்ளிப் பதக்கங்களையும் பெற்று கிளிநொச்சி மாவட்டம் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இந்த விளையாட்டுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 21 மாற்றுத்திறனாளிகள் பங்குபற்றியிருந்தனர்.

நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.




















# கல்முனையன்ஸ் போரத்தின் ஸஹர் உணவு திட்டம் ஏழாவது ஆண்டாகவும் நிறைவேற்றம்!

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்தியத்திலுள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளிகளுடன் தங்கியுள்ளவர்களுக்கும் மற்றும் தூர பிரதேசங்களில் இருந்து கல்முனைக்கு பல்வேறு தேவைகளுக்காக வருகை தருபவர்களுக்குமான இலவச ஸஹர் உணவு விநியோகிக்கும் செயற்றிட்டத்தை இந்த வருடமும் கல்முனையன்ஸ் போரம் மிக வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூர இடங்களில் இருந்து கல்முனை பிராந்தியத்துக்குப் பல்வேறுபட்ட தேவைகளுக்காக வருகை தருபவர்கள் புனித நோன்பை நோற்பதற்கான ஸஹர் உணவை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவது கல்முனையன்ஸ் போரத்தின் கவனத்துக்கு எட்டப்பட்டது.

இதனால் இந்தச் செயற்றிட்டம் கடந்த ஏழு வருடங்களாக தொடர்ந்து தங்குதடையின்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டுக்குத் தேவகுமார்; இலங்கை அணித் தலைவராகத் தெரிவானார்!

(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச இளம் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி மாநாட்டில் இலங்கை அணியின் தலைவராக விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் செல்வராஜா தேவகுமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாண்டிருப்பைச் சேர்ந்த இவர் களுவாஞ்சிகுடி பட்டிருப்பு தேசிய பாடசாலை ஆசிரியராவார்.

தாய்லாந்து நாட்டில் நாளை 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள சர்வதேச இளம் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி மாநாட்டில் நடைபெறவுள்ள போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றச் செல்லும் இலங்கை அணியின் தலைவராகவே இவர் தெரிவு செய்யப்பட்டார்.

தேவகுமார் மேலதிகமாக காரைதீவு விபுலானந்தா கல்வியகத்தில் இர



சாயனவியல் பாடத்தை பல்லாண்டு காலம் கற்பித்து வருகிறார்.

பட்டிருப்பு தேசிய பாடசாலையின் இரசாயனவியல் ஆசிரியர் செல்வராஜா தேவகுமார் தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் தலைமைதாங்கும் இலங்கை அணியில் இலங்கையின் பிர பல பாடசாலைகளைச் சேர்ந்த 6 மாண வர்கள் உள்ளடங்குவார்கள். இவர்கள் சர்வதேச இளம் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி மகாநாட்டில் நடைபெறவுள்ள போட்டி நிகழ்வுகள் மற்றும் இதர நிகழ்வுகளிலும் பங்குபற்றவுள்ள னர்.

சர்வதேச ஆராய்ச்சிக் குழு, செல்வராஜா தேவகுமார் ஆசிரியரை அங்கு நடைபெறவுள்ள பல்வேறு போட்டி நிகழ்வுகளுக்கும் நடுவராகப் பணியாற்றவும் அழைத்துள்ளது.

இவர் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் பழைய மாண வராவார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மண் வாரி வீசும் அமெரிக்கா!

உலகப் பொருளாதாரத்திற்கு எதிராக - குறிப்பாக இலங்கை போன்ற பொருளாதாரத்தில் தள்ளாடுகின்ற நாடுகளையும் சேர்த்து - அமெரிக்கா பிரகடனப்படுத்தியிருக்கும் வர்த்தகப் போர் அமெரிக்காவை எங்கு கொண்டு செல்லப் போகின்றது என்ற கேள்வி பல மட்டங்களில் எழுகிறது.

இந்த வரி விதிப்புக்களின் மூலம் அமெரிக்கா தனது பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் என்றும், அதிகமான வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றும் கனவு காண்கிறது.

ஆனால் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் இப்போதைய வர்த்தகப் போர்ப் பிரகடனத்தை அடுத்து அமெரிக்க பங்குச்சந்தை கடுமையாகச் சரிந்துள்ளது.

கொவிட் தொற்றுப் பரவிய காலத்துக்குப் பின்னர் அமெரிக்கப் பங்குச் சந்தை இவ்வளவு பெரிய பின்னடைவை சந்திப்பது இதுவே முதல் முறை. 2020 ஆம் ஆண்டின் பின்னர் அமெரிக்கப் பங்குச்சந்தை இப்போது இந்தப் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

ட்ரம்ப் கண்மண் தெரியாமல் அறிவித்துள்ள வரிகள், வர்த்தகப் போருக்கும் உலகளாவிய பொருளாதார மந்த நிலைக்கும் வழி வகுக்கும் என்ற அச்சத்தால் பங்குச் சந்தைகள் பெரும் சரிவைச் சந்தித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பிள் நிறுவனத்தின் பங்குகள் ஒரு நாளில் 9.2 சதவீதம் சரிந்தது. இது ஐந்து ஆண்டுகளில் அந்த நிறுவனம் சந்தித்த தினசரி உச்சச் சரிவாகும். மற்றொரு பிரபல ஐ.ரி. நிறுவனமான என்விடியா 7.8 சத வீதம் சரிந்தது. அமேசான் பங்குகள் ஒன்பது சதவீதத்தை இழந்துள்ளன.

உலக நாடுகள் மத்தியில் புதிய வர்த்தகப் போரை ஒரு மாபியா நடவடிக்கை போன்று அமெரிக்கா தொடங்கி இருப்பது அமெரிக்காவுக்கும் நல்லதல்ல, உலகப் பொருளாதாரத்திற்கும் நல்ல தல்ல என்கின்றனர் அவதானிகள்.

அதிகாரத்துக்கு வர தனது வர்த்தகத்தையும், அரசியலையும் பயன்படுத்திய ட்ரம்ப், இப்போது சர்வதேச விடயங்களைக் கையாள ஆயுத பலத்துக்கு மேலதிகமாக அரசியல் பொருளாதாரப் பலத்தை கையாள முற்படுகிறார்.

இதன் விளைவுகள் சர்வதேச ரீதியில் பலத்த தாக்கங்களை உருவாக்கும் அதே சமயம், அமெரிக்காவில் உள்நாட்டிலும் ட்ரம்புக்கு எதிரான அதிர்வலைகளை ஏற்படுத்தக் கூடிய ஆபத்து அதிகம் உண்டு என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

நாகாஸ்ரதிரத்தை ஒரு தடவைதான் பயன்படுத்தலாம். அது போல இந்த வர்த்தக வரிவிதிப்பு மிரட்டலை எச்சரிக்கையாககாட்டிக்கொண்டு விடயங்களை கையாள்வது வேறு, அதை விதித்து அதிலிருந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டால் அதை மீறி உலக நாடுகள் மீண்டெழும் போது அமெரிக்கா வலுவிழந்து போகும் ஆபத்து உண்டு.

அது மாத்திரமல்ல, பொருளாதார ரீதியில் நலிவுற்றிருக்கும் இலங்கை போன்ற நாடுகளுக்கு எதிராக இத்தகைய பலமிக்க ஆயுதத்தை அமெரிக்கா ஒரு தலைப்பட்சமாக ஏவிவிடும் போது, அத்தகைய நாடுகள் தங்களுக்கு புதிய வர்த்தகப் பங்காளிகளை தேடிச் சென்று நாடி அரவணைத்துக் கொள்ளும் நிலைமை உருவாகும்.

வொஷிங்டனின் வர்த்தகப் போரால் பாதிப்புற்ற நாடுகள் ஒருபுறம் அமெரிக்காவுடனான நட்புறவுகளை தூக்கிக் கடாசும். மறுபுறம் அமெரிக்க எதிரணி தரப்புகளோடு தங்கள் பொருளாதார நலனுக்காக கைகோர்க்கும் நிலைமையும் உருவாகும்.

இதனால் இந்த முட்டாள்தனமான நடவடிக்கை மூலம் தன்னுடைய உள்நாட்டிலும் சர்வதேச பங்காளிகள் மத்தியிலும் அமெரிக்கா இழப்புக்களைச் சந்திக்கப் போகின்றது என்பதுதான் வெளிப்படையாக தோன்றுகிறது.


அமெரிக்கா தன் தலைமீது தானே மண்வாரி கொட்டுகின்றது என்றுதான் இதனைக் கூற வேண்டும்.

# நாக பாம்பை வெற்றுக்கைகளால் பிடித்தவர் பாம்பு தீண்டி மரணம்!

வெற்றுக்கைகளால் நாக பாம்பைப் பிடித்து, பாம்பைக் காப்பாற்ற முயன்றவர் பாம்பு தீண்டியதில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புத்தூர், சிவன் கோயில் வீதியைச் சேர்ந்த கணேசக்குருக்கள் கௌரிதாசன் சர்மா என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இரவு, இவரது வீட்டின் முற்றத்தில் காணப்பட்ட வலைகளுக்குள் நாக பாம்பு ஒன்று சிக்கி தவித்துக்கொண்டிருந்ததை அவதானித்து, வலைகளுக்குள் சிக்கி இருந்த நாக பாம்பை வெற்றுக் கைகளால் பிடித்துக் காப்பாற்ற முற்பட்ட வேளை பாம்பு அவரைத் தீண்டியுள்ளது. அதையடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.









# சாய்ந்தமருது, கல்முனை பிரதான வீதிகளில் மின் விளக்குத் தொகுதிகள் புனரமைப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா, பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பிரதான வீதியில் கடந்த பல வருட காலமாக ஒளிராமல் செயலிழந்து காணப்பட்ட பெரிய மின் விளக்கு தொகுதிகள் கல்முனை மாநகர சபையால் தற்போது துரிதமாகத் திருத்தம் செய்யப்பட்டு, ஒளியூட்டப்பட்டுள்ளன.

குறித்த மின்விளக்கு தொகுதிகள் செயலிழந்திருந்தமையால் சாய்ந்தமருது நகர பஸாரின் ஒரு பகுதி இருள் சூழ்ந்து காணப்பட்டது. இந்த நிலையில், அண்மையில் இடம்பெற்ற சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபியால் உறுதியளிக்கப்பட்டதற்கு அமைவாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சாய்ந்தமருது நுழைவாயில் சந்தி தொடக்கம் அல்ஹிலால் பாடசாலை சந்தி வரையான பிரதான வீதியில் செயலிழந்திருந்த மீயுயர் மின் கம்பங்கள் மற்றும் இணைப்புகள் திருத்தம் செய்யப்பட்டு, பிரகாசமான மின் விளக்குகள் புதிதாக பொருத்தப்படப்பட்டு, ஒளியூட்டப்பட்டுள்ளன.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் நடைபெற்றது. இதில் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவும் கலந்து கொண்டிருந்தார்.



# சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் மக்கள் பாதுகாப்பான பயணங்களை முன்னெடுக்குக!

**மன்னார் மாவட்ட தொற்றா நோய் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி ஒஸ்மன் டெனி**

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு பண்டிகையின் போது மக்கள் பாதுகாப் பாக பயணங்களை முன்னெடு வேண்டும் என்பதோடு மது போதையில் வாகனம் செலுத்துதல் முற்றாகத் தடை செய்ய வேண்டும் என்று என மன்னார் மாவட்ட தொற்றா நோய் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி துரைநாயகம் ஒஸ்மன் டெனி தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழன் (3) காலை மன் னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவை கள் பணிமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு எங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான வருடமாக பிறக்க உள்ள நிலையில் புத்தாண்டு காலப் பகுதியில் மக்களாகிய நாங்கள் சில விடயங்களைக்க கடைப் பிடிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

சித்திரை புத்தாண்டு காலப் பகுதி யில் பொதுவாக மது அருந்தி விட்டு வாகனங்களை செலுத்துதல் அல்லது மது அருந்தி விட்டு வேறு இடங்களுக்கு பயணித்தல் மற்றும் பட்டாசு கொழுத் துதல் உள்ளிட்ட விடயங்களில் அவ தானமாக செயல்பட வேண்டும். மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத் துவதை முற்றாக தவிர்த்து கொள்ள வேண்டும்.

மேலும் பாதுகாப்பான வகையில் பட்டாசுகள் மற்றும் வானவேடிக்கைகள் கொளுத்த வேண்டும். புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளை மாவட்டத்தில் முன்னெடுக்கும் போது மருத் துவக் குழுவுடன் இணைந்து முதலுதவி குழுவையும் இணைத்துக் கொண்டு குறித்த நிகழ்வுகளை நடத்து வது ஏற்புடையதாக இருக்கும்.




புத்தாண்டு நிகழ்வுகளை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் இணைந்து முன்னெடுக்கும்போது குறித்த விடயங்கள் குறித்து அனை வரும் அவதானத்துடன் செயல்பட வேண்டும்.

இதேவேளை தற்போது மழை பெய்து கொண்டு இருப்பதால் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

எனவே இதனால் டெங்கு நோய் பரவும் சாத்தியக் கூறுகள் அதிகரித்துள்ளது.எனவே மக்கள் பொறுப்புடன் தமது வீடுகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலை மழை நீர் தேங்காத வகையில் வைத்திருக்க வேண்டும். இதனால் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை தவிர்த்து டெங்கு நோயிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.– என்றார்.





# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் கண்புரை அறுவைச் சிகிச்சை மீள ஆரம்பம்

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையில் கண்புரை அறுவை சிகிச்சை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக நியமனம் பெற்ற கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணரால் சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணராக கடமை யாற்றிய டாக்டர் எஸ்.டீ.டீ.சன்ரூவான் இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து கண்புரை அறுவை சிகிச்சை நடவடிக் கைகள் தற்காலிகமாக இடை நிறுத் தப்பட்டிருந்தன.

இதையடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக தற்போது கண் சத்திர சிகிச்சை வைத் திய நிபுணராக டாக்டர் என்.டபள்யூ. அரவிந்த நியமிக்கப்பட்டுள்ள நிலை யில் இந்தச் சேவை மீண்டும் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இந்தச் சத்திர சிகிச்சையை மீள ஆரம்பிப்பதற்கும் அந்த சேவையை மேம்படுத்திப் பொது மக்களுக்குச் சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுக் கும் நோக்கிலும் தேவையான மருத்துவ உபகரணங்கள் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளரின் உத்தரவுக்கு அமைவாக உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம் துரிதமாக செயல் பட்டு மருத்துவ உபகரணங்களை வழங்கினார்.

## கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்:

# சாய்ந்தமருது பழைய தபாலக வீதி வடிகான் சுத்தப்படுத்தும் பணிகள்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பழைய தபாலக வீதியில் வடிகான் அடைத்து, மழைநீர் ஓட முடியாது தேங்கி நிலையிலும், நாற்றம் வீசக் கூடிய நிலையிலும் காணப்பட்டது. இதனால் அவ்வீதி உள்ள பொதுமக்கள் பல இன்னல்களை அனுபவித்தனர்.

கல்முனை மாநகர சபையால் அவர்களின் இயந் திரங்களின் மூலமாக தேசிய மக்கள் சக்தியின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டதின் கீழ் சாய்ந்தமருது பழைய தபாலக வீதியில் உள்ள வடிகானை துப்பரவு செய்யும் பணி நேற்று (03) வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மழை நீர் சீராக வழிந்தோட முடியாது காணப்பட்ட



சாய்ந்தமருது பழைய தபாலக வீதியில் உள்ள வடி கானை சுத்தப்படுத்தியமைக்காக இதற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.







# திருப்பழுகாமம் கௌரி அம்பிகா ஆலய மகோற்சவம் ஆரம்பம்!

(பழுவூரான்)

திருப்பழுகாமம் ஸ்ரீ கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரர் சிவன் ஆலய மகோற்சவம் நேற்று முன்தினம் புதன் கிழமை கொடியேற்றலுடன் ஆரம்பமானது. நேற்று 03 ஆம் திகதி தைலாப்பியாங்கத் திருவிழாவும், இன்று 04 ஆம் திகதி புஸ்பாஞ்சலித் திருவிழாவும் இடம்பெற்றன.

நாளை 05 ஆம் திகதி திரு விளக்குத் திருவிழாவும்,06 ஆம் திகதி பஞ்சமுகார்ச்சனைத் திருவிழாவும்,07 ஆம் திகதி பிட்டுக்கு மண் சுமந்த திருவிழாவும், கற்பூரச் சட்டித் திருவிழாவும், 08 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும், 09 ஆம் திகதி திருவேட்டைத் திருவிழாவும், 10 ஆம் திகதி முத்துச் சப்பரத் திருவிழாவும், 11 ஆம் திகதி காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும், திருப்பொன்னூஞ்சலும் இடம்பெறவுள்ளன.

உற்சவ காலங்களில் தினமும் காலை உற்சவம் அதிகாலை 5 மணிக்கு யாகபூசையுடன் ஆரம்பமாகும். மாலை உற்சவம் மாலை 6 மணிக்கு யாக பூசையுடன் ஆரம்பமாகி, இரவு 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று, சுவாமி உள்வீதி மற்றும் வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பார்.

ஆலய உற்சவ காலக் கிரியைகள் யாவும் கண்டி ராக்சாவ ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயப் பிரதமகுருவும், மகோற்சவப் பிரதமகுருவுமான சாதகசிரோன்மணி சத்தியோத சிவாச்சாரியார் சிவஸ்ரீ தெ.கு.ஜனேந்திரராஜா குருக்கள் தலைமையில் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ கன.ஸ்ரீதரசர்மா உட்பட பல்வேறு குருமார்களால் நிகழ்த்தப்படுகிறது.




# கட்டாரில் வயது குறைந்த நடுவராக இலங்கையர் கடமையாற்றத் தெரிவு!

(பாறுக் ஷிஹான்)

கட்டர் கிரிக்கெட் கட்டுபாட்டு சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட ரி – 10 வெற்றி கிண்ண இறுதிப் போட்டியின் நடுவராக இலங்கை சார்பாக அபூபக்கர் முஹம்மட் றிலாஸ் வயது குறைந்த நடுவராகக் கடமையாற்றத்த தெரிவு செய்யபட்டுள்ளார்.

கட்டார் ஏசியன் நகர சர்வதேச கிரிக்கெட் மைதானதில் இரவு போட்டியாக இடம்பெற்ற இந்தத் தொடரில் கட்டார் கிரிக்கெட் சபையில் பதிவு செய்யப்பட்ட 14 மிக பலம் பொருந்திய முன்னணிக் கழகங்கள் போட்டியிட்டுத் தங்களது திறமையினை வெளிக்காட்டி இருந்தன.

இந்தத் தொடரில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ்,



நாடுகளைச் சேர்ந்த பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்தத் தொடரில் மொத்தமாக 49 போட்டிகளுக்காக 22 நடுவர்கள் கடமையாற்றினர். இவர்கள் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மற்றும் பங்களாதேஷ் நாடுகளைப் பிரதி நிதித்துவப்படுத்திக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்தப் போட்டியில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட ஒரே ஒரு நடுவர் அபூபக்கர் முஹம்மட் றிலாஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் கட்டார் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படுகின்ற ரி –20 போட்டிகள், ஒரு நாள் போட்டிகள், பல்கலைக்கழங்களுக்கு இடையிலான போட்டிகள், பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள், மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டிகள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான போட்டிகள் எனப் பல்வேறு போட்டிகளில் தனது திறமையால் குறிப்பிட்ட வருடங்களுக்குள் மிக சிறப்பான முறையில் நடுவராக கடமையாற்றி வருகின்றார். கட்டார் கிரிக்கெட் சபையில் கிட்டத்தட்ட 150 மேற்பட்ட நடுவர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.





# விவசாயம் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான பயிற்சி நெறி

(சர்ஜுன் லாபீர்)

அஸ்வசும, சமூர்த்தி மற்றும் விவசாயம் சார்ந்த குடும்பங்களுக்களை வலுவூட்டும் பயிற்சி நெறி நேற்று (03) சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா வின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கமைய இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு யுனிலிவர் நிறுவனத்தின் லைபோய் முழுமையான அனுசரனை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுக்கு சமூர்த்தி பிரிவின் உத்தியோகத்தர்கள் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உணவகங்களில் திடீர் சோதனை

(றியாஸ் ஆதம்)

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புமிக்க உணவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் உள்ள உணவகங்கள், உணவு கையாளும் நிறுனங்களில் புதன்கிழமை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர் தலைமையிலான உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இத்திடீர் சோதனையினை மேற்கொண்டனர்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதான வீதியில் உள்ள ஹோட்டல்கள், உணவு கையாளும் நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. அத்துடன் சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்ட உணவக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு திருத்த வழிமுறைகளுக்கு அமைவாக கால அவகாசமும் வழங்கப்பட்டு உரிமையாளர்கள், பணியாளர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.



# கச்சதீவை உடனடியாக மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

## மோடிக்கு ஸ்டாலின் அவசர கடிதம்

கச்சதீவை இலங்கையின் கட்டுப்பாட்டில் இருந்து உடனடியாக மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று, தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தியுள்ளார்.

நரேந்திர மோடி இன்று இலங்கைக்கு விஜயம் செய்கின்ற நிலையில், கச்சதீவு தொடர்பாக ஸ்டாலின்,மோடிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதில், பாக்கு நீரிணையில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய கடற்றொழில் உரிமையைப் பாதுகாப்பதற்கு, கச்சதீவின் கட்டுப்பாடு இந்தியாவினால் மீட்கப்பட வேண்டியது கட்டாயமானது என்று ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.





கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீளப்பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழக சட்டமன்றத்தில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது.

கச்சதீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டதன் விளைவாகவே, தமிழக மீனவர்களின் கடலுரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிரதமர் மோடிக்கு தாய்லாந்தில் உற்சாக வரவேற்பு பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் பங்கேற்கச் சென்றார்







பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக தாய்லாந்து சென்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவுக்கான முன்னெடுப்பு (பிம்ஸ்டெக்) அமைப்பின் உச்சி மாநாடு தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் இன்று நடைபெறுகிறது.

இதில், கலந்து கொள்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று டில்லியில் இருந்து புறப்பட்டு காலை 11 மணியளவில் பாங்கொக் சென்றடைந்தார். தாய்லாந்து வாழ் இந்தியர்கள் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் நடைபெற்ற பாரம்பரிய நடன நிகழ்ச்சியை பிரதமர் கண்டு களித்தார்.

தாய்லாந்துக்கு புறப்படும் முன்பாக பிரதமர் மோடி வெளியிட்ட பதிவில், “அடுத்த 3 நாள்களுக்கு தாய்லாந்து மற்றும் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள உள்ளேன். பிம்ஸ்டெக் நாடுகளுடனான இந்தியாவின் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறேன்.” என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தாய்லாந்து சென்றடைந்த பிரதமர் மோடி அந்நாட்டின் பிரதமர் ஷினவத்ராவை நேற்று சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது வர்த்தகம் உள்ளிட்ட இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவது குறித்து இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது.

இதனிடையே பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“இந்தியா-தாய்லாந்து இடையே வேறெங்கும் இல்லாத கலாச்சார பிணைப்பு உள்ளது. தாய்லாந்தின் ராமாயணமான ராமாகியன் நிகழ்ச்சி எனது மனதை பெரிதும் கவர்ந்து விட்டது. இது, இந்தியாவுக்கும், தாய்லாந்துக்கும் இடையே பகிரப்பட்ட கலாச்சார மற்றும் நாகரீக உறவுகளை வெளிப்படுத்தும் உண்மையான மற்றும் செழுமையான அனுபவமாக இருந்தது. நமது ராமாயணம் உண்மையிலேயே ஆசியாவின் பல பகுதிகளில் உள்ள இதயங்களையும், பாரம்பரியங்களையும் நம்முடன் இணைக்கிறது” என்று தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறும் பிம்ஸ்டெக் மாநாட்டில், பங்களாதேஷ் தலைமை ஆலோசகர் முகம்மது யூனுஸ், நேபாள பிரதமர் சர்மா ஒலி, மியான்மர் இராணுவ ஆட்சியாளர் மின் ஆங் ஹைலைங் உள்ளிட்டோரை பிரதமர் மோடி நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# தென் கொரிய ஜனாதிபதியை பதவி நீக்கும் தீர்மானத்தை உறுதி செய்தது நீதிமன்றம்

தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் மீதான பதவி நீக்கும் தீர் மானத்தை அந்நாட்டின் அரசமைப்பு நீதிமன்றம் உறுதி செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

அதன்படி இன்று அந்த தீர்மானம் உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், அவரை பதவியில் இருந்து நீக்கியுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வழக்கை மேற்பார்வையிட்ட நீதிபதிகள் குழுவினர் ஜனாதிபதியின் பதவி நீக்க தீர்மானத்தை ஒருமனதாக உறுதிசெய்துள்ளனர்.

அதற்கமைய, தென்கொரிய ஜனாதி பதி உடன் நடைமுறைக்கு வரும் வகை யில் பதவிநீக்கம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்காக 60 நாள்களுக்குள் புதிய தேர்தலை நடத்த வேண்டும் என குறிப் பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பு நீதிமன்ற நீதிபதி வழக்கு விசாரணையின் போது, இரு தரப்பினரின் வாதங்களையும் வாசித் தார்.

இந்த நிலையில் யூன் இராணு வச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய போது நடைமுறைகளைப் பின்பற்ற வில்லை என்று நீதிமன்றம் கண்ட றிந்துள்ளது.

இதேவேளை தேர்தல் நடைபெறும் காலம் வரையில் தற்போதைய பிரதமர், பதில் ஜனாதிபதியாக செயற்படவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2017 ஆம் ஆண்டும் தென் கொரியாவில் இதே முறை யில் ஒரு ஜனாதிபதி ஒருவர் பதவி நீக்கம் செய்யப்படுகிறார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மியன்மார் நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 3,145 ஆக அதிகரிப்பு

மியன்மாரை கடந்த வெள்ளிக் கிழமை ரிச்டர் அளவில் 7.7 ஆக உலுக்கிய பயங்கர நிலநடுக்கம் தலை நகர் நேபிடாவ், மண்டலே ஆகிய நகரங்களில் பெரும் பாதிப்பை ஏற் படுத்தியது.

மியான்மரில் இடிந்து விழுந்த கட் டடங்களுக்குள் இருந்து குவியல் குவிய லாக உடல்கள் மீட்கப்பட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இந்நிலையில், மியான்மர் நில நடுக்கத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 3,145 ஆக அதிகரித் துள்ளது.

458 பேர் காயம் அடைந்துள்ள னர். 221 பேர் மாயமாகி உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து மீட்புப்பணிகள் நடைபெற்று வருகிறது.

மியன்மாரில் கடந்த 28 திகதி ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கங் களால் ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருகிறது.

கட்டட இடிபாடுகளில் இருந்து ஒரு குழந்தை, கர்ப்பிணி பெண் உட்பட 4 பேரை 60 மணி நேரத்துக்கு பிறகு சீன மீட்புப் பணியாளர்கள் குழு மீட்டது. அத்துடன் ஹோட்டலின் இடிபாடுகளில் இருந்து 26 வயதுடைய ஒருவரை உயிருடன் மீட்டுள்ளதாக தீயணைப்பு மற்றும் இராணுவ ஆட்சிக்குழு தெரி வித்துள்ளது.

இந்நிலையில், நிலநடுக்கத்தின் போது இடிந்து விழுந்த கட்டடத்திற்குள் சிக்கிய குடும்பத்தினரின் காணொலி ஒன்று வெளியாகியுள்ளது.



இந்த காணொளியில், 13 மற்றும் 16 வயதுடைய இரண்டு இளம் பெண் களும், காயமடைந்த அவர்களின் பாட்டியும் இடிபாடுகளுக்கு மத்தியில் சிக்கித் தவிக்கும் காணொலி காண் போரை கதிகலங்க வைத்துள்ளது.

இவர்கள் நிலநடுக்க அதிர்வு களின் போது அவசரப் படிக்கட்டுகளுக்கு விரைந்த போது, திடீரென இடிந்த கட்ட டத்தின் சரிவில் சிக்கிக் கொண்டுள்ள னர்.

இடிபாடுகளை அகற்றி அவர்களை மீடக கூடுதல் உபகரணங்கள் தேவைப் படும் நிலையில், அதிகாரிகள் அவர் களை மீடக தொடர்ந்து போராடி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

நிலநடுக்க பாதிப்புக்கள் காரணமாக உயிரிழந்த 3,000 பேரது உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. இது தவிர 4,500 பேர் காயமடைந்துள்ளதோடு 441 பேரைக் காணவில்லை என வும், காணாமல் போனவர்களில், பெரும் பாலானோர் இறந்திருக்கக் கூடும். அவர்கள் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்பு குறைவு என்று கூறப்படுகி றது.

இந்த நிலையில் மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 10 ஆயி ரம் கட்டடங்கள் இடிந்துள்ளன என உலக சுகாதார அமைப்பு தெரிவித் துள்ளது .

இதில் பெரும்பாலான கட்டிடங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் கனரக இயந்திரங்கள் இல்லாததால் மீட்புப்பணியில் தாமதம் ஏற்பட்டுள் ளது.

இந்த நிலையில் மியன்மாரில் நிலநடுக்கத்தால் நீர் விநியோகம், சுகாதார உட்கட்டமைப்புகள் பாதிக் கப்பட்டுள்ளது.

இதனால் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

சுவாசத் தொற்றுகள், தோல் நோய் கள், டெங்கு காய்ச்சல் போன்ற நோய்க் கிருமிகளால் பரவும் நோய்கள், தட்டம்மை போன்ற தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய நோய்கள் ஆகியவற்றுக் கான பாதிப்பு அதிகரித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமையும் குறிப்பிடத் தக்கது.


பக்கங்கள் - 3

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 04/04/2025

## டொரண்டோ சிறைச்சாலையில் கைதி தாக்கப்பட்டு உயிரிழப்பு





C2 ▶

# இந்திய இளைஞர் சுட்டுப் படுகொலை!



கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்திலுள்ள பிராம்டன் நகரில் இந்திய இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட விடயம் அப்பகுதியில் வாழும் இந்தியர்களிடையே அச்சத்தை உருவாக்கியுள்ளது.

பிராம்டன் நகரில், பஞ்சாபைச் சேர்ந்த ஜக்மீத் என்னும் இளைஞரை, பிராம்டன் பிளாசாவில் மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

தகவலறிந்து வந்த மருத்துவ உதவிக் குழுவினரால் அவரைக் காப்பாற்ற முடியாமல் போயுள்ளது. சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் ஜக்மீத்.

மக்கள் பரபரப்பாக இயங்கும் ஒரு இடத்தில் வைத்து இந்திய இளைஞர் ஒருவர் பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள விடயம் அப்பகுதியில் வாழும் இந்தியர்களிடையே அச்சத்தை உருவாக்கியுள்ளது.

ஜக்மீத்தை சுட்டுக்கொன்றவர்கள் தப்பியோடிவிட்ட நிலையில், அவர்களை தீவிரமாகத் தேடிவரும் பொலிஸார், அவர்களைக் குறித்த தகவல்கள் தொடர்பில் மக்களுடைய உதவியை நாடியுள்ளார்கள்.






# மார்க்ஹாமில் யாழ்ப்பாண யுவதி படுகொலை தொடர்பில் ஒருவர் கைது

கனடாவில் மார்க்ஹாமில் கடந்த மாதம் ஒரு வீட்டில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் யாழ்ப்பாண யுவதி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்,

யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்கைச்சேர்ந்தநிலக்சிரகுதாஸ் என்பவரே இந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவராவார்.

2018 முதல் ஐந்து முறை தாக்குதல் நடத்தப்பட்ட சோலஸ் ரோடில் உள்ள வீட்டில் மார்ச் 7ஆம் திகதி காலை 6:30 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில், ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்திருந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் அவசர மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். எனினும், இந்த தாக்குதலில் 20 வயது நிலக்சி ராகுதாஸ் (மார்க்ஹாம்) உயிரிழந்தார்.

C2 ▶





# டொரண்டோ சிறைச்சாலையில் கைதி தாக்கப்பட்டு உயிரிழப்பு

டொரண்டோ தென் பகுதியில் அமைந்துள்ள தடுப்பு முகாமில் கடந்த வாரம் ஒரு கைதி மற்றொரு கைதியால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.


கடந்த 24 ஆம் திகதி மாலை 6 மணியளவில், இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த பொலிசார் சிறைச்சாலைக்கு அழைக்கப்பட்டனர்.

தாக்குதலில் கடுமையான காயமடைந்த 27 வயது மங்கோக் அகோல் என்பவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டாலும், மூன்று நாள்கள் கழித்து உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், சந்தேகநபராக 32 வயதான ஆண்ட்ரே ஃபோர்டு அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி நபருக்கு எதிராக பொலிஸார் கொலைக் குற்றச்சாட்டு சுமத்தி வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இந்த சம்பவம், இந்த ஆண்டு டொரண்டோவில் பதிவாகிய எட்டாவது கொலை என்று அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.



# எட்டோபிகோவில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

எட்டோபிகோவில் இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 60 வயது முதியவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து கிப்லிங் மற்றும் ஜென்தோர்ன் அவென்யூ அருகே, ரெக்ஸ்டேல் அவென்யூ வடபகுதியில் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

விபத்தில் 60 வயதான ஒருவர் படுகாயமடைந்து அருகிலுள்ள அவசர நிலை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என டொரண்டோ பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் ஈடுபட்ட மற்றொரு வாகனத்தின் ஓட்டுநர், சம்பவ இடத்திலேயே இருந்து பொலிஸாருடன் முழுமையாக ஒத்துழைக்கிறார் என கூறப்பட்டுள்ளது.

நடந்து வரும் விசாரணையினால், கிப்லிங் வீதி ஹின்டன் ரோடு மற்றும் ஸ்நேர்ஸ்ப்ரூக் டிரைவ் இடையில் இரு திசைகளிலும் முடக்கப்பட்டுள்ளது.

**மார்க்ஹாமில்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மற்றொரு 26 வயது ஆணுக்கு உயிருக்கு ஆபத்தில்லாத காயங்கள் ஏற்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்திருந்தனர். மேலும், ஒரு நாய் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என கருதப்படும் 28 வயது ஏக்வான் முர்ரே என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய மேற்படி நபர் மீது கொலை மற்றும் கொலை முயற்சி ஆகிய மேலதிக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.




# ஒட்டாவாவில் பெண் கொலை: இளைஞர் மீது குற்றச்சாட்டு

கனடாவின் ஒட்டாவா லோட்டவுன் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் 24 வயது இளைஞர் மீது கொலைக்குற்றம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒட்டாவா பொலிஸார் இதை பெண் கொலை என அடையாளப்படுத்தி விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவம் மாலை 4:38 மணியளவில் 20 ஹேனி தெரு (Heney St.) முகவரியில், MacDonald Gardens Park அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த கத்தி குத்து தாக்குதலில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 51 வயது ரெனீ டெஸ்காரி என பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்த தாக்குதலை மேற்கொண்டதாக 24 வயது ஒலிவர் டெனியா சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# கனடா சிறைகளில் கைதிகளுக்கு முதன்முறையாக இணைய வசதி



கனடாவின் மத்திய அரசு சிறைகளில் முதன்முறையாக கைதிகளுக்கு இணைய சேவையை அறிமுகப்படுத்துகின்றது.

கல்விக்கான வாய்ப்புகளை வழங்குதல் மெய்நிகர் அனுபவங்களை உருவாக்குதல் உள்ளிட்ட நோக்கங்களின் அடிப்படையில் இந்த சேவை அறிமுகம் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாற்றம் நீண்ட கால தண்டனை அனுபவிக்கும் கைதிகளுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைய உதவியாக அமைகிறது.

ஆனால், ஆபத்துகளை தவிர்த்து பயன்களை அதிகரிக்க திருத்தச்சேவை போராடி வருகிறது.

ஒன்டாரியோவிற்கு அருகிலுள்ள பாத் சிறையில் இந்த இணைய திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

கைதிகள் புதிய திறன்களை வளர்த்துக்கொண்டு, சிறைவாசத்திற்குப் பிறகு நல்ல வழியில் வாழ இந்த திட்டம் உதவும் என தெரிவிக்கப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட அடிப்படையில் கைதிகளுக்கு இவ்வாறு இணைய வசதி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.